**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.161/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 4 |
| Name (திரு/திருமதி) | : தேவசகாயம் |
| Father's Name/ Husband's Name | : அந்தோனிசாமி |
| Village & Taluk | : மாத்தூர் |
| Calling | : விவசாயம் |
| Age | : 78 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.09.2025**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியம் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 02.00 மணியளவில் நான் எனது வீட்டின் அருகே இருந்தபோது மட்டப்பாறையே சேர்ந்த ஒரு நபருக்கு விபத்து ஏற்பட்ட வழக்கு சம்பந்தமாக அனந்தபுரம் காவலர்கள் வரைபடம் வரைந்து எழுதினார்கள் அதில் நான் மேற்படி கையொப்பத்தை செய்தேன். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் மாத்தூர் என்றால் சரிதான். மாத்தூர் கிராமத்தில் நான் இருந்தபோது காவலர்கள் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் இல்லை நான் மட்டப்பாறை கிராமத்திற்கு குடும்பம் வந்துவிட்டேன். என் வீட்டில் இருந்து நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றபோது காவலர்கள் அங்கு வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்தபோது என்னுடன் யாரேனும் கையொப்பம் செய்தனரா என்பதை நான் கவனிக்கவில்லை. நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் இடவில்லை என்றாலும் என் வீட்டில் வைத்துதான் கையொப்பம் செய்தேன் என்றாலும், நான் காவலர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும், எனவே தான் யார் என்னுடன் கையொப்பம் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.161/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : வேளாங்கணி |
| Father's Name/ Husband's Name | : ஆரோக்கியதாஸ் |
| Village & Taluk | : மாத்துார் |
| Calling | : கூலி |
| Age | : 48 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.09.2025**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சியம் கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மட்டப்பாறை ரோடு அருகே பெரிய மரம் அருகில் விபத்து வழக்கு சம்பந்தமாக சம்பந்தமாக அனந்தபுரம் காவலர்கள் வரைபடம் வரைந்து எழுதினார்கள் அதில் நான் மேற்படி கையொப்பத்தை செய்தேன். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. மட்டப்பாறை பேருந்து நிறுத்தத்திடம் வைத்து கையொப்பம் செய்தேன். மடப்பாறையில் உள்ள சிறிய பாலத்திடம் நான் கையெப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்தபோது வேறு யாராரும் என்னுடன் கையொப்பம் செய்யவில்லை. மாலை சுமார் 04.30 மணியளவில் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டது என்ற விரவம் எனக்கு தெரியாது என்றாலும், நான் வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.